
# ஏனிந்தத் தேவாசுர யுத்தம்?




த. கலாமணி

ஜீவநதி வெளியீடு

# ஏனிந்தத் தேவாசுர யுத்தம் ?

த. கலாமணி

ஜீவநதி வெளியீடு
கலை அகம்
அல்வாய்
2013

**ஏனிந்தத் தேவாசுர யுத்தம்?**

**(கவிதை தொகுதி)**

© த.கலாமணி

முதற்பதிப்பு
2013 ஏப்ரல்

விலை

ரூபா 150/=

நூலாக்கக் குறிப்புகள்
பக்கங்கள் vi +34

அட்டைப்பட வடிமைப்பு
க.பரணீதரன்

வெளியீடு
'ஜீவநதி', கலைஅகம், அல்வாய்

அச்சுப்பதிப்பு
மதி கலர்ஸ், நல்லூர்

ISBN:

ஜீவநதி வெளியீடு:26

# சமர்ப்பணம்

கவிதை நயமுரைத்த
என் தந்தை ச.தம்பிஐயா,
நோயுற்ற வேளை எனைப் பராமரித்த
என் அக்காச்சி(மாமியார்)
சி.நல்லதங்கம்
ஆகியோரின் பாதங்களுக்கு.

# பதிப்புரை

ஒரே சமயத்தில் எனது தந்தையின் ஐந்து நூல்களை வெளிக் கொணர வேண்டும் என்ற என் விருப்பத்தில் வெளிவரும் ஐந்தாவது நூல் இதுவாகும். இது ஜீவநதியின் 26ஆவது நூலுமாகும். இத்தருணத்தில் வெளிவரும் என் தந்தையின் ஐந்து நூல்களும் ஐந்து வகையானவை என்பதை மனங்கொள்ளும்போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. கல்வியியல், சிறுகதை, விமர்சனம், நாடகம் என்ற வரிசையில் கவிதை நூலையும் வெளியிட வேண்டும் என முனைந்தபோது, கவிதைகளைத் தேடிப் பிடிப்பது என்பது சிரமமாகவே இருந்தது. எனினும், கவிதைகள் வெளிவந்த, கிடைக்கக்கூடிய சஞ்சிகைகளிலிருந்து பெற்றவற்றைத் தொகுக்க முடிந்தது. நான் சிறுவனாக இருந்த காலத்தில், மஹாகவியின் "குறும்பா"த் தொகுதியிலிருந்து அப்பா படித்துக் காட்டிய சில குறும்பாக்கள் (Limericks) ஞாபகத்திற்கு வந்து, "அப்பாவும் அவ்வப்போது இவற்றை எழுதிக் காட்டுவாரே" என்பதும் நினைவில் நின்றது. இதனால், அவர் எழுதிய குறும்பாக்கள் சிலவற்றையும் இத்தொகுப்பில் இடம்பெறச் செய்துள்ளேன். அச்சேற்றிய "மதி கலர்ஸ்" நிறுவனத்தாருக்கும் இக்கவிதைகள் வெளிவந்த சஞ்சிகைகளுக்கும் என் நன்றி.

– க.பரணீதரன்

*2013.04.05*

# என்னுரை

"கவிதை என்றால் என்ன?" எனும் வினாவுக்கு விடை காண்பது எளிதன்று என்பர். எனினும் கவிதை என்பது ஒரு தரிசன அனுபவத்தைச் செட்டாக உணர்த்துகின்ற ஒரு மொழி எனலாம். இவ்வாறு சொற் சிக்கனத்துடன் வாழ்க்கை அனுபவங்களை உண்மையாகச் சொல்ல முற்படும்போது, யாப்பிலக்கணத்துடன் எழுதப்படுபவை மரபுக் கவிதைகள் என்றும் யாப்பில்லாமல் எழுதப்படுப்வை புதுக்கவிதைகள் என்றும் பாகுபடுத்தல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால், புதுக்கவிதைகளை எழுத முனைந்த மரபுக் கவிதையாளர்களின் புதுக்கவிதைகளிலும் கூட மரபுக் கவிதைகளின் சாயல் காணக் கிடக்கின்றது.

நல்ல கவிதைகளைப் படிக்கும்போது–அவை துயர் அநுபவங்களைப் பகிரினும்– ஒரு முறை துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருக்கிறதே, அந்த அநுபவம் தான் கவிதையின் உயிர். இந்த அநுபவமே என்னைக் கவிதை எழுதத் தூண்டியது. அந்நாளில் தான் எழுதும் பாடல்களை, கவிதைகளை என்னை ஒரு முறை படித்துப் பார்க்குமாறு என் தந்தை கூறுவார். சரமகவி எழுதும்போது கூட, அதில் அநுபவ தரிசனத்தை ஏற்றிக் கவி சொல்லும் பாங்கு என்னை ஈர்த்தது. நான் கவிதை எழுத ஆரம்பித்த காலத்தில் என் தந்தையிடம் கற்றுக் கொண்ட யாப்பும் சொல்லாட்சியுமே எனக்கு முதுசொமாயின. நான் எழுதிய கவிதைகளுள் பல இன்று என் கைவசமில்லை. எழுதிய கவிதைகளைப் பிரசுரிக்க வேண்டும் என்ற முனைப்பு இல்லாதிருந்தமையே இதற்குக் காரணம் என்று இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன். கவிதைகள் மீது ஈர்ப்பு

ஏற்பட்ட வேளைகளிலெல்லாம் நானும் எழுத முற்பட்டிருக்கிறேன் என்பதற்கான அடையாளம் தான் மஹாகவி உருத்திரமூர்த்தியின் "குறும்பா" ஈர்ப்பில் எழுதிய, இந்நாளைய தரிசனங்களான குறும்பாக்கள்.

எனது கவிதைகளைத் தொகுத்து, ஒரு நூலாக வெளியிட வேண்டும் என்று எனது மகன் பரணீதரன் விரும்பிய இத்தருணத்தில் தான், ஒரு சில கவிதைகளை அவை இடம்பெற்ற சஞ்சிகைகளி லிருந்து தேடி எடுத்து, இந்நூலை வெளிக்கொணர முடிந்தது. இந்நூலை அழகான ஒரு நூலாக வெளிக்கொணரும் "மதி கலர்ஸ்" அச்சகத்தாருக்கும் மல்லிகை, குமரன், ஜீவநதி, மனோகரா ஆகிய சஞ்சிகைகளுக்கும் என் நன்றிகள்.

– த. கலாமணி
2013.04.03

# இனிக்கும் நினைவுகள்

காட்டில் கனிந்திருக்கும்
“பெர்ரி”ப் பழங்கள்
பறிப்பதற்காய்
சின்னஞ்சிறு வயதினிலே
சிறுவர்கள் நாம்
சேர்ந்த செல்வோம்.

காட்டில்
உயர்வான வெளியின் கீழே
மலையடிவாரத்தே காணும்
ஊசியிலைந் செடிகள் யாவும்
சோகமே உருவாய் நிற்கும்.

காட்டுக் கோழி கத்தும்
இளமான் கன்று ஓன்றோடும்
பனிபடர்ந்த பாதையோ நம்
முன்னாலே
வளைந்து செல்லும்.

விடியலின் செந்துளிபோல்
சிவந்திருக்கும் கனிகளெல்லாம்
மரவையாலான எங்கள்
வண்டிகளில்
ஏற்றிச் செல்வோம்.

வழிநெடுக
பறித்தெடுத்த பழங்கள் யாவும்

சுவைத்து நாம் முடித்ததாலே
வழியிலே கொஞ்சநேரம்...
நெஞ்சு தடுமாறிக் கொள்ளும்.

ஆயினும் சாக்குப் போக்காய்,
வீட்டிலே கேட்கும் போது
"பழுதாய் இல்லை" என்று
சமாளிப்பாய்ச் சொல்லி வந்தோம்.

கல்லூரிக் காலம் வர
எமது பழைய
பாதையில் நீ
உடன் வந்து வழியனுப்ப...
காட்சி கண்ட
கதிர்களெல்லாம்
காற்றுக்குத் தலைவயங்கி
பீதியுடன் சலசலத்த
ஒலி இன்னும்
நெஞ்சை நெருடும்.

ஓ....
கல்லூரிக் காலமும் தான்
எவ்வளவு நாட்கள் நீளும்,
கிராமத்திலிருந்து
இன்னும்
எவ்வளவு காதம் நீளம்!

ஆனாலும் இதோ
உயர்கல்வி முடித்து நானும்
உறுதி கொண்ட நெஞ்சினனாய்
இனிக்கும் நல் நினைவுகளுடன்
உன்னிடமே வருகின்றேன்.

சூரியக் கதிரொளிபோல்
சிரிக்கும் செவ்விதழ்களுடன்
பழகிய அந்த வீதியிலே
நீயும் தான் ஓடிவருவாய்.

இன்றும்
இணைந்து நாம் ஓடும்போது
ரகசியமாய்க் குசுகுசுப்பேன்:
"என் கண்ணே
கொஞ்சம் பொறு!
அதோ, கனிந்த
பெர்ரிப் பழங்கள்!"

மூலம் – இவான் கல்யோஸ்னிக்

# நினைவுகள்

நாங்கள் வளர்ந்தோம்,
வாசலுக்கு அப்பாலும்
வெறித்திருந்தோம் -
போர்முடிந்து திரும்பும்
தந்தையர்க்காய்,
பொரு படை வீரர்தம்
புத்திரர் நாம்
ஒவ்வொருவரும் -
ஒவ்வொரு நாளும்
காத்திருந்தோம்.

வீடுகளில் -
உடைந்த ஜன்னல்கள் யாவும்
இன்னும்-
கண்ணாடி வேண்டி ஏங்கும்.
ஆயினும்,
அவற்றிற்காக
எங்கு நாம் போவோம்?

நாளும் -
கிராமத்துத் தபால் வழங்கும்
சேவகியர் வந்ததுமே
எங்கும்
சோகத்தின் இழை பரவும்.

நாட் செல்ல-
நீண்ட படை நடப்பு

அணிஅணியாய் நெருங்கும்:
“இனியும் யுத்தமில்லை,
இனி,மேலும் யுத்தமில்லை...”
களைப்புற்ற முகங்கள் பாடும்.

பசுந்தரை மீது தாவி
ஓடியே, விரைவோம்
நாம் –
படையணியை
சூழ்ந்து கொண்டே
துள்ளுவோம் குதிப்போம்.
ஆனால்...
தந்தையர் அனைவருமே மீளார்
தனயர் தம் உள்ளம் சோரும்.

சூரியப் பிழம்பின் செம்மை
வெம்மையாய்த் தகிக்கும்,
அங்கே...
இருள்சூழ் உலகில்
ஒளியோ,
தூபியாய் நினைவில் நிற்கும்.

மூலம் – இவான் கல்யோஸ்னிக்

# வாழும் ஆசிரியம்

ஐயா, போலோ!
இன்று நீ
இவ்வுலகை விட்டுப்
பிரிந்து சென்றதாக
அறிந்தேன்.
சோகம் என் உயிரை அரிக்கிறது.

பிரிவுகள்
துயர் தருபவைதான்.
ஆனால், நீ –
மீண்டும் வருவாய்
அறிவேன், நான்.

ஆசிரிய சைனியத்திடமும்
ஏழை விவசாயிகளின் உள்ளங்களிலும்
கிராமவாசிகளாய் நலிவுற்று
ஒடுக்கப்பட்டு உழலும்
மாந்தரிடையேயும்
நீ வருவாய்.
புதுப்பித்துக் கொண்ட பலத்தோடு
வீரியமாய்...
மீண்டும் நீ வந்து சேர்வாய்.

போரிடுவோர்க்கு
மரணம் தரும் வாழ்வுடன்
நீ வருவாய்.

ஏனெனில் –
நன்றியுள்ள மக்கள் கூட்டத்திடையே
மரணித்தோர்க்கு –
புலவோர் சொல்வது போல் –
மரணத்தின் முடிவில்
சுவர்க்க வாசல் திறக்கும்...
உலகு விரியும்...
வாழ்வு மலரும்.
நீ–
விடுதலைக்கான கல்வி விதையை
நாட்டினாய்,
நம்பிக்கை ஒளி பாய்ச்சினாய்.
கண்ணீர் மழையினாலேனும்
வியர்வையினாலேனும்
அதனை நாம் காப்போம்.
நீ கனவு கண்ட
பெருவிருட்சத்தை
போர்க்குணம் கொண்ட
அதன் கிளைகளுடன்
நச்சுச் செடி களைந்து
நாம் வளர்ப்போம்.
செழிப்பான மரமாய் வளர
உழைப்போம்!

ஆங்கில மூலம் – Lindia Turner. பிரேஸில் நாட்டைச்சேர்ந்த போலோ பிரெய்றி ஒடுக்கப்பட்டோர் கல்வி மீட்புச் சிந்தனையாளர். அவர் மறைவைக் குறித்து, பத்தாம் ஆண்டு நினைவுநாளில் (1997) Lindia Turner எழுதிய கவிதை இது.

## கனல்

போரில் சிதைந்து
உடைந்த பாலம்
ஊடறுத்துப் பாய்ந்து
வளையும் நீரில்
தகிக்கும்
சூரியன்!

சிறுபரல்களையும்
மணற் தூசியையும்
புவியோட்டிலிருந்து வாரியிறைக்கும்
பலத்த பேய்க் காற்று –
ஏவுகணைப் போர்க்கருவிபோல்
“விசர்த்தனமாய்” நகரும்.

கரிய அம்மனிதனும்
பாரமேற்றிய
அவன் சைக்கிள் வண்டியும்
மரக்குற்றிக் கனத்துக்கு
வெட்டிய விறகுத் துண்டுகளோடு
அதிக பிரயாசைப்பட்டும் –
தொடர்ந்தும் உழக்க முடியாதபடி
தடுத்து நிறுத்தும்
காற்று.

திடமான முதுகை
வளைத்தபடி

மணலில்
அரைவாசியும் புதைந்ததுபோன
தனது ரதத்தின்
பாரிய சில்லை - அவன்
பேராவலுடன் உயர்த்துவது
கர்ணனை நினைவூட்டும்.

சைக்கிளையும் சுமையையும்
முழுமையாய்த் தூக்கிவிட -
கடுமையாக,
மேலும் கடுமையாக
முயற்சிக்கையில் -
விசாலித்த கைகளை வீசி,
சுற்றி வளைத்து,
பலமாகத் தாக்கியவாறே
மீண்டும்
அவனை விழுங்க வரும்
காற்று.

சாராயக் கடையிலிருந்து
நடந்து வரும்
மனிதன் போல்
தட்டுத்தடுமாறி
தள்ளாடியபடியே
பாரமேற்றிய அந்தச் சைக்கிளும்
அம்மனிதனும்...

மணலின் வாரியிறைப்பில்
சைக்கிளும் அதன் சுமையும்
மனிதனும் அவன் விறகும்
ஏரிக்குள் வீழ்ந்து விட
கரம் கொட்டி நகைத்தபடி
வெற்றி பெற்ற விஜயன் போல்
களிப்புடன் கடந்து செல்லும்
காற்று!

அந்த மனிதனின் குடிலுக்கு வெளியே
பெருமூச்சுடன்
விலா எலும்பு வெளித்தெரிய
இரு சின்னஞ் சிறார்கள்
விறகுக்காய்
அடுக்களையில் காத்திருப்பர்.

மூலம்.V.பரந்தாமன்

# விழிப்பு

ஆழ ஊடுருவிற்று,
அவன் பார்வை.
மறைக்க முயன்றேன்...

முடியவில்லை;
ஞான போதம் எனக்களித்த
ஞானத்திருஷ்டியின் முன்
தோற்றுப்போனேன்!

எனது உலகமே
அவன் விழிகளுள்
கட்டுண்டு கிடந்த போதும்
நேர்நோக்கத் திராணியற்று
முகம் சாய்த்தேன்.

விம்மலுடன்
என் மூச்சுக்கலந்து...
“லப் டப், லப் டப்”
- அவன் இதயத்தின் அருகாய்
என் நெஞ்சு நெருங்கி-
அவன் பார்வைக்குப் பதில் சொன்னது.

விழிகளை மெல்ல மலர்த்தி
முகம் காட்ட முயன்றேன்.
“படித்து விடுவானோ?”
என்ற
அச்சம் மேலோங்க...

கைகளால் கண் பொத்தி,
விரல் இடுக்கில் கண் நுழைத்தேன்.
அப்பப்பா...!
அவன் விழிகளின் முறுவல் கண்டு
நடுங்கினேன் –
உள் மனம் விழிப்புக் கொண்ட
பெண்மையே போல.

மூலம் – மேரி கில்மோர்

# வானவில்லும் வானத்துக் கருமுகிலும்

இள மாலைப் பொழுது!
வானத்தில்
வில்லை வரைபவன் யாரோ?

தொங்கும் நீர்த்திவலைகளில்
கதிர் பாய்ச்சி நிற்பவன்,
நம் தோழன்!
கண்களிலன்றி
வர்ண ஜாலங்களை
மனங்களிலும் வாரி இறைப்பான்.

வானத்திரையில் பூசிய நிறப்பட்டை
கலையும் வேளை -
மெலிதாய்
சிறுதூறலில் நனைய
மனசு ஏங்கும்!

மஞ்சள் பூசும்
மாலை வெயில் உள்ள வரை
மழையாய் வர்ஷிப்பான்.
அவன்
எம் இரட்சகன்.
யார்க்கும் கெடுதல் இல்லை,
உயிர்ப்பயமற்ற வாழ்வு.

இன்று பகற்பொழுதிலும்

திடு கூறாய் -
இருளரக்கன் எங்கு வந்தான் ?

கருமேகம் புடை சூழ,
மின் கீற்றுப் பாய்ந்து
அரவமாய் நெளிய -
'இடி இடி' எனச் சிரித்து
ஏளனம் செய்ய வந்தான்,
கொடுங்கோலன்!

சூறையாய்க் காற்று வீசும்
வெள்ளமாய் வானம் கொட்டும்
பிரளயாக்கினியாய்ப் பெருகி
உடைமைகள் துவம்சம் செய்தான்!

உயிர்க்குலை பறிக்க வந்தோன்
உற்ற துணையாமோ ?
தணிந்து அடங்குதல்
இளைப்பாறற் பொருட்டே.

இனி -
வானவில் கண்டு
பரவசங் கொண்ட நெஞ்சு
வானத்துக் கருமை சூழ
சிறு புள்ளாய்
ஒடுங்கிப் போகும்.

# ஏனிந்தத் தேவாசுர யுத்தம்?

இந்திரன் இறங்கி வந்தான்
சுந்தரஞ்சேர் இலங்காபுரி சுவர்க்கத்தை நிகர்க்குமென
முந்தியொரு நாள் கேட்ட சேதி அவன் நினைவில் வர
அந்தர லோகம் விட்டு
இந்திரன் இறங்கி வந்தான்.

சுந்தரன் அவன் பாவம்
இந்த நாள் இலங்கைத் தீவு இருக்கும் நிலை அறியானாய்
கந்தமலர் மாலைசூடி கந்தருவன் கோலம் பூண்டு
சந்ததம் களிகொள் லோலன்
இந்திரன் இலங்கை வந்தான்.

வந்தவன் வடபுலத்துற்றான்
துந்துபியின் முழக்கம் போலும் பல்குழல் வழி எறிகணைகள்
பெய்தெங்கும் பாய்ந்து சீறி கந்தகத்து நெடி பரவி
புந்தியைக் கலக்கியதும்
இந்திரியம் இற்றுப் போனான்.

இந்திரன் திகைத்து நின்றான்
இந்திரவில் உமிழ் நெருப்பாய் ஏகு மட்டும் ஏவு 'ஷெல்'லில்
செந்திருவை ஒத்த மாதர் சிறு குழந்தை பேதமின்றி
அந்தரித்து ஆயிரமாய்
அந்தியத்தை அடையக் கண்டான்.

இந்திரன் எண்ணலுற்றான்
இந்த விதம் தேவாசுர யுத்தம் உம்பர் வாழ் உலகத்துமில்லை
எந்தவிதம் ஏன் எவர்க்காய் யார் தேவர் யார் அசுரர்

சிந்தையிலே எழும் வினாக்கள்
இந்திரன் விடைகள் ஓர்வான்.

இந்த விதி மானிடர்க்கேன்
சிந்திய கண்ணீர் வற்றிக் காயுமுன் தொடர் அவலம்
முந்தை வினையோ இல்லை
மூண்ட பெரும் பழியோ
ஏனிந்தத் தேவாசுர யுத்தம்
இந்திரன் இயம்பவொண்ணான்.

# ஏ. கே. 47 (A. K. 47)

வில்லுடன் அம்பும் ஏந்தி
விலங்கினத்தை விரட்டிச் சென்று
ஈட்டியால் குத்திக் கிழிக்கும்
இழிதொழில் இனியும் வேண்டாம்
கத்தியும் பொல்லும் கொண்டு
கோஷ்டியாய்ச் சண்டை செய்து
குருதியை உறைய வைக்கும்
காடைத்தனம் அதுவும் வேண்டாம்.

கும்பலாய்க் கூடி நின்று
கூவிப் பிதற்றலோடு
கூச்சலும் கும்மாளமுமாய்க்
கொட்டமடித்தல் வேண்டாம்
காட்டுமிராண்டிகள் போல்
ஆக்ரோஷம் மிகக் கொண்டு
அநாகரிமாய் அலறும்
காட்டுக் கத்தல் இனியும் வேண்டாம்.

ஓலைக் குடிலில் வாழும்
இழிநிலை இனி எமக்கில்லை
மாடக் கோபுரம் கட்டி
வாழ வழியுண்டு
மெலிதான இசை பொழிய
மெல்லியலாரோடு கூடி
ஒயிலாக அசைந்து வர
ஆடலும் பாடலும் உண்டு.

ஏந்திழையார் கூட ஏந்தும்
ஏவுகணை எம்மிடமுண்டு
ஒரு நொடியில் குலமழிக்கும்
அணுக்குண்டும் பலவுண்டு
நாம் இன்று நாகரிகர்
இரச வித்தை நிதம் காட்டும்
அறிவியலின் உச்சத்தைத்
தொட்டு விட்ட உந்நதர்கள்.

# ஒரு வர்க்கத்தினரின் ஓலம்

காலையிலே தோன்றி உல காளுகின்ற கதிரவனும்
மாலையிலே போய்மறைவான் ஓய்வுபெற வேண்டி
ஆலையிலே நாள் முழுதும் ஆர்வமுடன் நாமுழைத்தும்
ஆழியென நீளுமொரு பாழ்துயர நிலையேனோ

காடுகளும் கழனிகளாய்க் கார்காத்துக் கதிர்சொரிய
மாடுகளாய் நாமுழைத்தும் வாழ்வினிலே கண்டதென்ன
வீடுகொள்ளும் வேதனையும் வாட்டிநிற்கும் நோய்பிணியும்
சாடுகின்ற சூறையென வாட்டுகின்ற நிலையேனோ

அலைகடலின் மடியினிலே தொலைநெடுகப் படகோடி
வலைவிரித்துப் படுமீன்கள் வகைவகையாய்க் கொண்டுவந்தும்
உலைஅடுக்கிக் கறிசமைக்க உதிரியாகும் "ஒட்டி"யேனும்
விலைகொடுத்து வாங்கியுண்ணும் விடிவுவரா நிலையேனோ

மிச்சம்பல கோடிரூபா அந்நியச்செலா வணியெனக்
கச்சிதமாய்ப் பத்திரிகை கட்டியமே கூறிநிற்க
உச்சிமலைச் சரிவினிலே பச்சைநிறத் தளிர்பறித்தும்
குச்சு"லயன் களிலே"நாம் சருகாகும் நிலையேனோ

சொந்தமென்று சொல்வதற்குச் சிறுதுண்டு நிலமுமில்லை
உந்துதலோ டுழைப்பவர்கள் உரிமைகொள்ள எதுவுமில்லை
குந்தகமுஞ் செய்தறியார் குற்றுயிரா யாகியிங்கே
பங்கமுறத் தானழிந்து பரிதவிக்கும் நிலையேனோ

பகலென்றும் இரவென்றும் அயராது நாமுழைத்தும்
சுகமொன்றும் இல்லாது தவிக்கின்றோம், இவையெல்லாம்
யுகமெல்லாம் எமைச்சுரண்டி உயருமொரு வர்க்கமொன்றால்
அவம்போகும் எம்வாழ்வின் அவலநிலை எனவுணர்ந்தோம்

“ஈச்சாரில்” சாய்ந்திருந்து மாய்ச்சலின்றி மெய்வளர்த்துப்
பூச்சாண்டி காட்டியொரு பெரும்பொழுதைக் கழிப்போரே
மூச்சிரைக்க முயன்றுழைத்தும் முன்னேற்றம் எதுவுமின்றி
நீச்சலடித் துழலுமெங்கள் நீள்துயர நிலைகேளீர்

ஓட்டைக் குடிசையுள்நாம் ஒடுங்கிப் படுத்திருந்து
முகட்டை விழித்தபடி முகம்சோரும் வேளையிலே
கறங்கும் மின்விசிறிக் காற்றின் கதகதப்பில்
கிறங்கிக் கனிவாகக் கட்டிலிலே நீர்துயில்வீர்

தீற்றும் உணவுவகை தேர்ந்தெடுத்துத் தீஞ்சுவையின்
சாற்றதனைச் சாய்மனையில் சயனிக்கும் சிறாருக்கு
நச்சரித்தும் நயமோடும் ஊட்டுகையில் நம்மனையில்
எச்சிலுக்காய் இளநெஞ்சம் ஏங்குவதை அறிவீரோ

# கனவுகளைச் சுமப்போம் !

கனவுகளைச் சுமந்தோம்.

புத்தாயிரம் ஆண்டில் பேதங்கள்
களைந்து
மனித குல மேன்மை கோளமெங்கும்
தழைக்குமென
கனவுகளைச் சுமந்தோம்.

ஒரு சிறு காலடி தான் –
சந்திர மண்ணில்
நீல் ஆம்ஸ்ரோங் பதித்த தடம்.
சேதி அறிந்து
புளகாங்கிதம் கொண்டோம்.
“நம் மனித குலம் கண்ட மாபெரும்
பாய்ச்சல்.
இங்கே –
எல்லோரும் ஒரு குலம்
எல்லோரும் ஒரு நிறை”
– மமதையில் மொழிந்தோம்.

ஆயிரம் மைல் கொண்ட நீண்ட
பயணமும்
முதல் எடுத்து வைக்கும்
காலடியிலிருந்தே ஆரம்பிக்கும்.
– சீனப் பழமொழியைத்
துணைக்கிழுத்தோம்.

வரலாற்றினிடை நிகழ்ந்த
துயரங்களையும் மறந்தோம்.
நாகசாகியையும் ஹிரோஷிமாவையும்
நினைவுக் களஞ்சியத்திலிருந்தே
துடைத்தெறிந்தோம்.

விஞ்ஞானம் தொழில் நுட்பம்
சூழலியல் இலத்திரனியல்
எஞ்ஞான்றும் எம்மவர்க்கு ஏற்றம்
தரும் வாழ்வு
அருகிருப்பதாய்
கனவுகளில் மிதந்தோம்.
“ஜீனியஸ்!”
எம்மைஅறியாமலே
எம் வாய் முணுமுணுக்கும்.

கனவுகளில் நாம் மிதக்கும் வேளை...

அங்கே –
மேதாவியர் பலரும் கூடி
அணுவையும் அணுக்கருத்
துகளையும் பிளந்து
பேரழிவாற்றல் பேணும் படைக்கலம்
படைப்பர்.

இங்கோ –

கம்பியூட்டர் முன் அமர்ந்து
நரை மெல்ல எட்டிப் பார்க்கும்
நிலை வந்தும் நிலையாமை தேரா
ஈனப்பிறவியொன்று
மொட்டைக்கடிதமொன்றை
சுகமாய்ப் பிரசவிக்கும் –
மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும்
முடிச்சுப் போட்டு.

சூழலின் யதார்த்தம் யார்க்கு
வேண்டும்?
கனவுகளே போதும்
விழிப்பு வேண்டாம்
பட்டாம்பூச்சியாய்ப் பறந்து...
வண்ண வண்ணமாய் மிளிரும்
வடிவான காட்சிகளில் அமிழ்ந்து...
கனவுகளில் மிதப்போம்.

# வியப்பூட்டுஞ் செயலென்ன?

இருள்போக்க அன்னை
இயற்கை உவந்தளித்த
அருள்கூட்டும் அந்த
ஆதவன் அவனொளியை
மருள்பார்வை கொண்டே
மனிதன் நோக்கிநிற்க...
இருள்வந்து சூழும்
துயில்வந்து சேரும்
துயில்நீத்த வேளை
கதிர்வந்து சூழும்
செயல்கண்ட அவனோ
செயல்குன்றி நின்றான்.

இடிஇடிக்கும் புயல்மேகம்
எழுந்ததுமே நெஞ்சம்
படபடக்கப் பயந்தோடிப்
பதைபதைக்கும் மூச்சோடு
செடிமறைவில் சென்றவனோ
சிலகாலம் செல்லச்
செடிவளர்க்கும் செல்வமிதே
மழையென்று கண்டு
கதிரவனை இறையெனவே
கரங்கூப்பி நின்றான்.

அடர்கானை ஆளுகின்ற
மிருகங்கள் தாக்குதற்காய்

கரடான கல்லைநன்கு
உரசிடும் வேளையிலே...
உதித்த சிறு பொறியில்
உள்ள பயன் காணும்
சிந்தனைத் திறமந்தச்
சிந்தையில் மலர்ந்ததுவே.

நாட் செல்ல-
இயற்கையைப் போற்றி
இன்புற்(று) இருந்தவன்
இயற்கை இழைத்திடும்
இன்னலும் கண்டான்.

இறக்கை விரித்துயரப்
பறக்கும் திறன்கண்டு
வியக்கும் வகையினிலே
வானூர்தி கண்டான்
இயற்கை இழைக்கின்ற
அநீதி அதுகண்டு
செயற்கை மழைபெய்யச்
செய்கைமுறை கண்டான்.

உலகெங்கும் உள்ளோர்
உரையாடல், பாடல்
தெளிவாகக் கேட்கும்
ஒலிப்பெட்டி கண்டான்

மிதமாகும் உணவும்
விரயம்போ காமல்
பதமாக்கி வைக்கும்
குளிர்ப்பெட்டி கண்டான்.

“கனவுலகக் காரிகையை”,
“கருந்தேள்கண் ணாயிரத்தை”
நினைவினிலே மீட்டுதற்குத்
திரைப்படமும் கண்டான்
அண்டவெளி அம்புலியைச்
சென்றடைந்த வீரரினைக்
கண்ணெதிரே காட்டுகின்ற
“டெலிவிஷனும்” கண்டான்.

காய்ச்சல் முதல் காசம்வரை
நோய்ச்சல்நொடி போக்குதற்கும்
நோய்க்கிருமித் தாக்கமதை
நுண்கதிரால் தேற்றுதற்கும்
பழுதடைந்த உடலுறுப்பைப்
பிறிதொன்றால் மாற்றுதற்கும்
மருத்துவத்தின் எல்லைகண்டு
மகத்துவமே கொண்டான்.

எந்திரத்தை அடிமைகொண்டான்
எத்தனையோ ஆக்கிவைத்தான்
அந்தரத்தே அதிசயிக்கும்
அற்புதங்கள் செய்துவைத்தான்

“கொம்பியூட்டர்” கொண்டுவாழ்வின்
கொழுகொம்பு தேடிநிற்கும்
எந்திர வாழ்வுவாழும்
அந்தரநிலை படைத்தான்.

மேலும்-
கறங்கும் மின்விசிறிக்
காற்றின் கதகதப்பில்
கிறங்கித் துயில்கொள்ளும்
சுகமொன்று காண்பதற்கும்
பட்டுத் துணிமணியும்
பஞ்சணையும் சாலையிலே
செட்டாகப் பவனிவரச்
சோக்கான காரென்றும்
கற்றாய்ந்து தன்வாழ்வைச்
சொகுசாக்க வழிகண்டான்.

“சங்கரனார் சடைமுடியில்
சரண்புகுந்து இருப்பவளே,
சந்திரப்பெண்” என்றவனைச்
சந்தி சிரிக்கவைத்துப்
பங்கமிலாப் பழங்கதைகள்
பகன்றவனும் வியந்துநிற்க,
பம்பரமாய்ச் சுழன்றுசுற்றிப்
பவனிவரும் கோள்களெனும்
கிங்கரர்கள் சூழுமொரு
அண்டவெளி தனிலே

அஞ்ஞானம் போக்கிடவும்
மெய்ஞ்ஞானம் போற்றிடவும்
விஞ்ஞானப் புதுமையெனும்
விண்ஞானம் காட்டிடவும்
இஞ்ஞாலம் இருந்துகொண்டே
அந்தரத்தில் செய்ம்மதியைச்
சஞ்சாரஞ் செய்துவரச்
செய்ததுவும் அவன்செயலே.

இன்றோ-
பீரங்கி வெடித்துப்
பேரிடி மூளும்
போர்ப்புகை தோன்றி
வானத்தை மூடும்.

எண்ணரிய கருமங்கள்
ஆற்றும் வகைவிடுத்து
அண்டைஅயல் நாடுகளை
அணுக்குண்டால் தாக்குவதும்
கூட்டாக வாழ்ந்திடுவோர்
நல்வாழ்வைக் குலைப்பதும்
நாட்டமெனக் கொண்டே
மனிதன் நலிவுற்றான்.

புத்தபிரான் யேசுபிரான்
போர்க்கீதைக் கண்ணபிரான்
சத்தியமே உருவான
சாந்தமூர்த்தி அண்ணல்பிரான்
பூரியரின் ஆயுதாமாம்
மதமென்னும் மாயையென்றே
வர்க்கமற்ற சமுதாயம்
காண வந்த மார்க்ஸ் ஆக
இத்தரையில் நலிவுநீங்கி
மனிதகுலம் உய்வதற்காய்
அத்தனைபேர் அன்றுசொல்லி
எத்தனைதான் இந்தநாளில்
சத்தியமாய் ஓங்கி நிற்றல்
காண்கின்றோம் எதுவுமில்லை.

கண்ணெதிரில் எவ்விடமும்
கயமை தலையெடுக்க
விண்வெளியில் விரைந்தென்ன
வியப்பூட்டுஞ் செயலென்ன?

விஞ்ஞானி படைத்தளித்த
விஞ்ஞான விந்தைகள்தான்
அஞ்ஞான இருளகற்றும்
அறிவுக் கருவூலமென
மெய்ஞ்ஞானம் போற்றிடுவோர்
மெய்யாக மதித்திடவே

இஞ்ஞாலம் இனிதோங்கச்
செய்தவனே விஞ்ஞானி.

இருள்நீக்கி ஒளியேற்றும்
இயல்பினனாம் விஞ்ஞானி
செகமுயரச் செய்தளித்த
சாதனையைப் போற்றிடுவோர்
அகஇருள் நீங்கிமண்ணில்
சமதர்மம் ஓங்கிநிற்கும்
யுகமொன்று மலர்ந்திடுநல்
நாளொன்று இனிவருமோ!

## குறும்பா பத்து

**நிகழ்தகவு**
(Probability)

"ஆபத்து" இனி இல்லை என்றார் டாக்டர்
அறுவைச் சிகிச்சைக்கு அவர் சூரர்
விபத்தடைந்த நோயாளி
"செப்ரிக்" ஆகி சாதழுவ
"தத்து" வந்து பிசகிற்றென்றார் போதர்

**சார்புத் தத்துவம்**
(Special Relativity Principle)

நளினியென நாமம் கொண்டாள் பாவை
ஏழிற் செய்வாய்த் தோஷம் அவள் தீர்வை
பழி அகற்றச் செவ்வாய்க்கே
இன்று போய் நேற்று வந்தாள்
ஒளியை விட விரைவு கொள்ளும் பூவை.

**நேர முகாமைத்துவம்**
(Time Management)

மழித்த தலை முன் குடுமிக்கோலம்
தரித்தலின்றித் தாவிச் செல்லும் சாலம்
வழிமறித்துக் குடுமி பற்றக்
"காலரதன்" வசமாவான்
எளியகாலத் திட்டம் அநு கூலம்.

**போட்டிச் சமூகம்**
**(Competitive society)**

இறுதி வரை படி படி எனப் பணித்தார்
பெருமை கொள்ளப் "பவிசு" வேண்டும் மனத்தார்
சிறிது நேரம் ஓயவிடார்
தூக்கம் வந்தும் துஞ்ச விடார்
கிறுதி வந்து "கோட்டை" விட்டால் என் செய்வார்?

**பச்சை வீட்டு விளைவு**
**(Greenhouse Effect)**

தாவரங்கள் தக்க வைக்கார் கேட்டில்
பூமிப்பந்தைத் தாமழிப்பார் நாட்டில்
காபனீர் ஒட்சைட்டால்
வெக்கைமிகும் கேடு வரும்
சோபனங்கள் குன்றும் தன் பாட்டில்.

**கவிக்கோ**
**(The Poet)**

"நாஷனல் சேட்" பொன் பொத்தான் பூட்டி
"ஃபாஸன்" மிகும் "பவுன்டன்" பேனா மாட்டி
"காசினிக்கோர் கவிக்கோ" என
தமக்குத் தாம் பெயர் சூட்டி
வேஷம் அதை ஆற்றிடுவார் நாட்டி

**காத்திருப்பு**

(Awaiting)

இராகவனின் பின் சென்றான் இளவல்
இராமுழுதும் விழித்திருந்தான் மழவன்
ஓராங்கு துயர் கழிந்த நாளில்
ஊர்மிளையாள் காத்திருந்தாள்
உறக்கம் வந் துற்ற தென்றான் கொழுநன்.

**விடலைப் பருவம்**

(Adolescence)

உறவே என் உயிரென்றான் தில்லை
மறவேனென விசித்தாள் பெண் முல்லை
விரைவாய் நிலை மறந்தார் அவர்
கடந்தார் ஓர் எல்லை
பெருவாழ்வினைத் தொலைத்தார் இனித் தொல்லை.

**பகழு வதை**

(Ragging)

அகம் மகிழ அகடவிகடப் பேச்சு
உகந்தார் கூறக் கூச்சநாச்சம் போச்சு
பகடிவதை நோக்கமிதை
அறியாதார் செய்கையினால்
சகபாடிகளின் அடிதடியாய் ஆச்சு.

## இதயச் சீராக்கி
## (Pace Maker)

உயர்ச்சி தரும் உயிரணையாள் என் இதயம்
துயக்கம் வந்து தளர்ச்சியுற்றாள் மென் சதையம்
முயற்சி நிறை முடுக்கியுனை
வலது நெஞ்சில் பெயர்த்து வைத்தார்
ஐயுறவால் மலர்ச்சி பெற்றாள் மன் உதயம்.

## இதயச் சீராக்கி
## (Pace Maker)

உயர்ச்சி தாழ்ச்சி உயிரனையாளர்களின் இதயம்
துடிக்கும் அந்த துளர்ச்சியுற்றாள் பெண் சகாதுயம்
முயற்சி நிறை முடிக்கப்பனை
வலது நெஞ்சின் பொய்த்துளைத்தாள்
ஆதாளராயர்ச்சி பெற்றாள் மன் உதயம்



வாராய்! கவிதையாம் மணிப்பெயர்க் காதலி!
பன்னாள் பன்மதி ஆண்டு பல கழிந்தன.
நின்னருள் வதன நா னேருறக் கண்டே
அந்த நாள் நீயெனை அடிமையாக் கொள, யாம்
மானிடர் குழாத்தின் மறைவுறத் தனியிருந்
தெண்ணிலா வின்பத் திருங்கடற் றிளைத்தோம்.

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல் - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்
சிந்தையே, இம்மூன்றுஞ் செய்.

-பாரதி